# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - டிசம்பர் 13, 2025 Weekly E-paper • December 8, 2025





# திசைவழி காட்டும் திராவிட மாடல்!

சுப.வீரபாண்டியன்

## ‘இம்பீச்மென்ட்’ தீர்மானம் எதற்காக?

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## ஜனநாயகம்

தலையங்கம்

## பொறுப்பாளர்கள் நியமனம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - டிசம்பர் 13, 2025

Weekly E-paper • December 8, 2025


# திசைவழி காட்டும் திராவிட மாடல்!

**சுப.வீரபாண்டியன்**



இன்று நடந்து கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சி, திரும்பும் திசையெல்லாம் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும், வலிவூட்டும் ஆட்சியாகவே உள்ளது!

புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம் என்று பெண்களுக்கான பல நலத்திட்டங்கள் இன்றைய ஆட்சியில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன என்றாலும், மகளிர் உரிமை தொகைத் திட்டம், பெரும் வரவேற்பை மக்களிடையே பெற்றுள்ளது !

அத்திட்டத்தால், ஏற்கனவே ஏறத்தாழ ஒரு கோடியே 14 லட்சம் பெண்கள் பயன் பெற்று வருகின்றனர். இப்போது அத்திட்டத்தை மேலும் 15 லட்சம் பெண்களுக்கு, அரசு விரிவு படுத்தி உள்ளது! ஆக மொத்தம் ஒரு கோடியே 29 லட்சம் பெண்களுக்கு இதனால் ஓர் ஆதரவு கிடைக்கிறது. அதாவது, தமிழ்நாட்டில் உள்ள மொத்தப் பெண்களின் தொகையில், சரி பாதிக்குச் சற்றுக் குறைவாக இந்த எண்ணிக்கை அமைந்துள்ளது !

இரண்டாவது விரிவாக்கத் திட்டத்தின் தொடக்க விழா, நேற்று (டிசம்பர் 12) சென்னையில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டார்கள்!

இந்த விழாவிற்குக் கிருஷ்ணம்மாள் ஜெகநாதனும் அழைக்கப்பட்டிருந்தார். அவர் வினோபாவின் சீடர்களில் ஒருவர். அந்த நாளிலேயே சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்! அவரின் உழவர் நில உரிமைச் சங்கத்திற்கு, ஏற்கனவே நம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும், இன்றைய கழகத்தின் தலைவர் அவர்களும் பல்வேறு உதவிகள் செய்துள்ளனர் என்பதை, அவர் இந்து குழுமம் வெளியிட்டுள்ள நூலில் தெரிவித்திருக்கிறார்.

இவையெல்லாம் வரும் தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காகவே செய்யப்படுகின்றன என்று சிலர் குறை கூறுகின்றனர்.

தேர்தல் அரசியலில், மக்களுக்கு நன்மைகளைச் செய்து, அவற்றின் மூலம் வாக்குகளைப் பெறுவதில் தவறு ஒன்றுமில்லை!

ஆனால் இன்றைய திராவிட மாடல் ஆட்சி செய்வதெல்லாம் வெறும் வாக்குகளுக்காக மட்டும்தான் என்று சொல்ல முடியாது! இப்போதெல்லாம் பெண்களுக்குக் கருப்பைப் புற்றுநோய் கூடுதலாக வருவதைப் பார்க்கிறோம். இதற்கும் தமிழ்நாடு அரசு, ஒரு செயலைத் தொடங்கி உள்ளது!

9 வயது முதல் 14 வயது வரையிலான, இளம் பெண்களுக்குப் புற்றுநோய்த் தடுப்பூசி போடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது ! இது பெண்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றும் நல்லதொரு திட்டம் என்பதை எதிரிகள் கூட மறுக்க முடியாது. அதே நேரத்தில், இதனை வெறும் வாக்குகளைப் பெறுவதற்கான திட்டம் என்றும் சொல்லி விட முடியாது!




அவர்கள் யாருக்கும் இந்தத் தேர்தலில் வாக்குகள் இல்லை. 9 முதல் 12 வயது வரையிலான பெண்களுக்கு அடுத்த தேர்தலிலும் வாக்குகள் இல்லை! எனவே அடுத்த தேர்தலை மட்டும் நெஞ்சில் நிறுத்தாமல், அடுத்த தலைமுறையை நினைவில் கொண்டு செயலாற்றுகிறது இன்றைய தமிழ்நாடு அரசு !

எனவேதான் இன்றைய அரசை, திசை வழிகாட்டும் திராவிட அரசு என்று சொல்லி நாம் கொண்டாடுகிறோம்!

•

# 'இம்பீச்மென்ட்' தீர்மானம் எதற்காக?

## வழக்கறிஞர் இராம.வைரமுத்து



தொடர்ந்து சர்ச்சைக்குரிய வகையில் தீர்ப்புகளை அளித்து வரும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்களை பதவி நீக்கம் செய்ய கோரும் இம்பீச்மென்ட் தீர்மானத்திற்கான மனுவை தி.மு.க உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த 120 மக்களவை உறுப்பினர்கள் கையெழுத்திட்டு மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவிடம் வழங்கியிருக்கிறார்கள்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950 பிரிவு 124 (4) மற்றும் நீதிபதிகள் (விசாரணை) சட்டம், 1968 ஆகியவை உச்சநீதிமன்ற நீதிபதிகள் பதவி நீக்கம் தொடர்பான வழிமுறைகளைக் குறிப்பிடுகிறது. மேற்கூறிய பிரிவுகள் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவி நீக்கத்திற்கும் பொருந்தும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 128 குறிப்பிடுகிறது. அதன்படி நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் அவர்களின் மீது இம்பீச்மென்ட் கொண்டுவர எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

நீதிபதியை பதவி நீக்கம் செய்யக் கோரி மக்களவையில் குறைந்தபட்சம் 100 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் குறைந்தபட்சம் 50 உறுப்பினர்களும் கையெழுத்திட்டு மனு அளிக்க வேண்டும். பின்னர் அந்த மனுவை மக்களவைத் தலைவர் ஏற்றுக்கொண்டால் 3 நபர்களைக் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்படும். இந்தக் குழுவில் பொதுவாக உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அல்லது ஒரு மூத்த நீதிபதி, உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, சட்ட நிபுணர் என 3 பேர் இருப்பார்கள். இந்தக் குழு நீதிபதி மீதான புகாருக்கான ஆதாரங்களை ஆராய்ந்து விசாரிக்கும். இதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட நீதிபதியின் விளக்கத்தையும் விசாரணைக் குழு கேட்கும். இதன் பிறகு விரிவான அறிக்கையை மக்களவைத் தலைவரிடம் விசாரணை குழு சமர்ப்பிக்கும். நீதிபதி மீது தவறு உறுதி செய்யப்படும் பட்சத்தில் அந்தத் தீர்மானம் மீது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதமும் அதன் பின்னர் வாக்கெடுப்பும் நடத்தப்படும். பதவிநீக்கம் செய்ய அவையின் மொத்த உறுப்பினர்களில் 50% ஆதரவு அல்லது அப்போது அவையில் இருக்கும் உறுப்பினர்களில் மூன்றில் 2 பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படும். இல்லாவிட்டால் தீர்மானம் நிராகரிக்கப்படும். ஒருவேளை ஆதரவு கிடைத்துவிட்டால், அந்தத் தீர்மானம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டு சம்பந்தப்பட்ட நீதிபதியை பதவி நீக்கம் செய்து குடியரசுத் தலைவர் உத்தரவிடுவார். இதுவே இம்பீச்மென்ட் தீர்மானத்திற்கான நடைமுறை.

பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ் பின்னணியில் தான் சர்ச்சைக்குரிய தீர்ப்புகளை நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் வழங்கி வருகிறார் என்று மக்கள் சந்தேகிக்கும் சூழலில் அவர் மீதான இம்பீச்மென்ட் மனுவை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா ஏற்பாரா என்பது ஐயம் தான்.

Proved Misbehaviour, Incapacity, Dishonesty, Failure to perform duty, Lack of Integrity போன்ற அம்சங்களை இம்பீச்மென்ட் தீர்மானத்திற்கானஅடிப்படைகளாக, இந்திய அரசியலமைப்புச் சட்டம் வரையறுத்திருக்கிறது. இவை அனைத்துமே நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் அவர்களுக்கு பொருந்துவதால் இந்தியா கூட்டணி கட்சிகள் இவரை பதவி நீக்கம் செய்யக்கோரி இம்பீச்மென்ட் மனுவை சமர்ப்பித்துள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த கடந்த 75 ஆண்டுகளில் 9 நீதிபதிகள் மீது மட்டும் தான் இம்பீச்மென்ட் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரதமர் மோடி பதவிக்கு வருவதற்கு முன்பு உச்சநீதிமன்ற நீதிபதி ராமசாமி (1993), கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி சௌமித்ரா சென் (2011), சிக்கிம் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பி.டி. தினகரன் (2011) ஆகிய மூன்று நீதிபதிகள் மீது மட்டுமே இம்பீச்மென்ட் கொண்டு வரப்பட்டது. மூவருமே தார்மீக அடிப்படையில் தங்களது பதவியை விட்டு விலகினர். பிரதமர் மோடி ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தற்போது வரை ஆறு நீதிபதிகள் மீது இம்பீச்மென்ட் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மத்தியப் பிரதேச உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.கே.கங்குலி (2015) மீதான புகார் போதிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற விசாரணை குழுவின் முடிவாலும், ஆந்திரா மற்றும் தெலுங்கானா உயர்நீதிமன்ற நீதிபதி சி.வி.நாகர்ஜுனா ரெட்டி (2017) மீதான புகார் மனுவில் கையெழுத்திட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஆதரவை திரும்பப் பெற்றதாலும், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா (2018) மீதான புகார் மாநிலங்களவையில் போதிய ஆதரவில்லை என்பதாலும் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சேகர் குமார் யாதவ் (2024), அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா (2025) மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி ஆர் சாமிநாதன் (2025) மீதான புகார்கள் தற்போது நிலுவையில் இருக்கிறது.

எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள இம்பீச்மென்ட் தீர்மானம் பா.ஜ.க ஆதரவுடன் தோற்கடிக்கப்படலாம். ஆனாலும் இந்திய நீதித்துறைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் ஒரு நீதிபதியின் சர்ச்சைக்குரிய தீர்ப்புகள் குறித்து நாடு தழுவிய அளவில் விவாதிக்க இதுவே சரியான வழிமுறையாகும். இந்த விவகாரத்தில் நாடாளுமன்றத்தின் முடிவு எப்படி அமைந்தாலும், "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்று கருதி நீதி பரிபாலனம் செய்யாமல் மதச்சார்புடன் நடந்து கொள்ளும் நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் அவர்கள் நீதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதே மக்கள் மன்றத்தின் தீர்க்கமான முடிவாகும். ●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஜனநாயகம்

ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவால் தேர்தல் ஆணையம் கைப்பற்றப்பட்டுள்ளது. அமலாக்கத் துறை, தேசிய புலனாய்வு அமைப்பு,சிபிஐபோன்றநிறுவனங்களும்கூட கைப்பற்றப்பட்டுள்ளன. ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவின் கட்டுப்பாட்டில் தேர்தல் ஆணையம் இருப்பதால் தேர்தலை வடிவமைக்க அது இவர்களுடன் இணைந்து செயல்படுகிறது" என்று நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர் ராகுல்காந்தி பேசியிருக்கிறார்.

இந்தப் பேச்சை அவ்வளவு சாதாரணமாக நினைத்துவிடக் கூடாது.

இந்தியா உலகத்தின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொண்டிருக்கும் நிலையில், அந்த ஜனநாயகம் இன்று கேள்விக்குள் நின்றுகொண்டு இருக்கிறது.

மக்களுக்கு உரிமையான வாக்குகள், மக்களாட்சியை நிறுவக்கூடிய வலிமைமிக்க மக்களின் வாக்குகள், தங்களை யார் ஆட்சி செய்ய வேண்டும் என்ற முடிவைச் சொல்லுகின்ற வாக்குகள் இன்று திருடப்படுகின்றன என்றால், இதன் பெயர் ஜனநாயகமா? வாக்குத் திருட்டு என்பது தேசவிரோதச் செயல் என்கிறார் ராகுல் காந்தி.

மக்கள் மன்றம் முதல் நாடாளுமன்றம் வரையும் இதை விளக்கிச் சொல்லிவிட்டார் அவர். இதுகுறித்துக் பேசுவதற்குக் கூட வழிவிடாமல், கூச்சம் இல்லாமல் ஒன்றிய ஆளும் பாஜக அரசு இருந்து வருகிறது என்பதை ஜனநாயகம் என்று எப்படிச் சொல்லிட முடியும்?

பேசுவதெல்லாம் பொய்கள். மக்கள் பற்றியோ அல்லது மசோதாக்களைப் பற்றியோ எதிர்கட்சிகள் விவாதித்தால், உடனே நேரு போன்ற தலைவர்களை இழுத்து வைத்துக்கொண்டு இழிவு செய்கிறார்களே தவிர நேர்மையாகப் பேச ஒன்றிய பாஜக முனைவதில்லை என்றால் எங்கே இருக்கிறது ஜனநாயகம்?

சர்வாதிகாரக் கோரப்பிடிக்குள் இருக்கும் ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டியது மக்களின் கடமை.

அதற்கு ஒரேவழி மதவாத ஆர்எஸ்எஸ்/பாஜக ஆகியவைகளைத் துடைத்து எறிய வேண்டும் மக்கள்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை


இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



மதுரை மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவை மற்றும் இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பில் நூல் அறிமுக கூட்டம் 10.12.2025 அன்று துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம.வைரமுத்து தலைமையில் இளைஞர் அணி ஸ்டூடியோ சரவணன் முன்னிலையில் நடைபெற்றது. பேரவையின் தலைவர் அய்யா சுப.வீ அவர்களின் உரைத்தொகுப்பான "கலைஞரின் நெஞ்சுக்கு நீதி ஓர் அறிமுகம்" நூல் குறித்து மாவட்டத் தலைவர் மருத்துவர் மோ.சந்திரன் மற்றும் திராவிட இயக்க பெருந்தொண்டர் காரைக்குடி இராம சுப்பையா அவர்கள் எழுதிய "நானும் எனது திராவிட இயக்க நினைவுகளும்" நூல் குறித்து தி.மு.க சுற்றுச்சூழல் அணி சிவகங்கை மாவட்ட அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் உரையாற்றினர். மாவட்ட துணைத் தலைவர் பேராசிரியை சாந்தி வரவேற்றார். மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பி.அமர்நாத் நன்றி கூறினார்.

# கருஞ்சட்டைப் பதிப்பகம்


## புதிய வெளியீடுகள் தொடர்புக்கு: 91 812294




தமிழ்நாட்டின் மொழி அரசியல் என்றால் அது இந்தி மொழிக்கு எதிராக, சமஸ்கிருத மொழிக்கு எதிராக நடந்த போராட்டங்கள்தான் நினைவிற்கு வரும். கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக இந்தி ஆதிக்கத்துக்கு எதிராக போராடுவது தமிழ்நாட்டின் மொழி அரசியலாக, பண்பாட்டு அரசியலாக இருந்து வருகிறது. இந்தச் சூழலில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் மொழி அரசியலைக் கடந்து 'மொழியும் மனிதனும்' என்ற தலைப்பில் IBC தமிழ் இணையத்தில் பேசிய உரைகளின் தொகுப்புதான் இந்நூல்.

பெரும்பாலும் அரசியலில் இயங்குபவர்கள் இலக்கியத்தில் அவ்வளவு ஆர்வம் காட்ட மாட்டார்கள். முத்தமிழ் அறிஞர் கலைஞர் போன்ற ஒரு சிலர் தான் அரசியலிலும் இலக்கியத்திலும் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருப்பார்கள். அந்த வகையில் பேராசிரியர் சுபவீ அவர்கள் அரசியல் சார்ந்து தொடர்ந்து பேசி எழுதி வந்தாலும், குறள் வானம் என்ற இலக்கியமும் , கவிதா போன்ற கதைகளையும் எழுதி வந்துள்ளார். அந்த வகையில் மொழியும் மனிதனும் எனும் இந்த நூல் தமிழ் மொழியில் தொல்காப்பியம் தொட்டு இன்று வரை தமிழ் மொழி எப்படி இயங்குகிறது என்பதை மிக நேர்த்தியாக பதிவு செய்கிறது இந்நூல்.

மொழி பற்றி அதுவும் தமிழ் மொழி பற்றி அறிந்து கொள்ள நினைப்பவர்களுக்கு இது மிகச் சிறந்த நூலாகும்.




"வந்தே மாதரம்" (இந்தியப் பார்ப்பனியத்தின் தேசியகீதம்)

தாய்நாட்டை மீட்பதற்கான கருவியாக திகழ்ந்தது, 'வந்தே மாதரம்' பாடல் என்று பிரதமர் மோடி இன்று தெரிவித்துள்ளார்.

வந்தே மாதரம் பாடல் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரானது அல்ல. அது அவர்களிடமிருந்து இந்திய விடுதலையும் கோரவில்லை. இஸ்லாமியர்களை கொன்று அழிப்பது மட்டுமே அது வலியுறுத்திய செய்தி. அதன் இலக்கு வர்ணாசிரமம் செழிக்கும் ஓர் இந்துராஷ்டிரத்தை படைத்து விட வேண்டும் என்பதே. இஸ்லாமியர்களைக் கொல்லுவதன் மூலம் "பூமியை தூய்மை செய்ய வேண்டும்" என்று பேசுகிறது (purification of the earth from their presence). ஆகவே மனசாட்சியை விற்றவர்கள் மட்டுமே இந்தப் பாடலை ஏற்க முடியும், மதவெறி வன்மம் மிக்கவர்கள் மட்டுமே இந்த பாடலைப் பாட முடியும் என்கிறார் பேராசிரியர் த.செயராமன்.

வந்தே மாதரம் 'இந்தியப் பார்ப்பனியத்தின் தேசிய கீதம்' என்ற இந்நூல் இன்னும் பல செய்திகளைச் சொல்ல வருகிறது.

## பொறுப்பாளர்கள் நியமனம்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் 'தகவல் தொழில்நுட்ப அணி' பொறுப்பாளர்களாகக் கீழ்க்கண்ட தோழர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**மாநில துணைச் செயலாளர்கள்:**

1. யுக பிரகாஷ் (9597984534)
2. மோ.ரூபஸ் (9159801565)

### மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்:

**மதுரை மாவட்டம்:**

அமைப்பாளர் - பா.பகலவன் (7550098327)

துணை அமைப்பாளர் - மு.வீரபாண்டியன் (8124507745)

**தென்காசி மாவட்டம் :**

அமைப்பாளர் - க.த.மணியம்மை (7358571843)

துணை அமைப்பாளர் - இரா.இந்துமதி (8015821212)

**சிவகங்கை மாவட்டம் :**

அமைப்பாளர் - செ.முத்துக்குமார் (8838455887)

**சென்னை மாவட்டம் :**

அமைப்பாளர் - ராம் பிரசாத் (7708462029)

**கடலூர் மாவட்டம் :**

அமைப்பாளர் - பெ. பெவின் (6382618753)

துணை அமைப்பாளர் - ரா. சதீஸ் பாபு (8523997649)

**திருப்பூர் மாவட்டம் :**

அமைப்பாளர் - முத்தமிழ் அரசு (6379545987)

*பொறுப்பேற்றுள்ள பொறுப்பாளர்கள் மாநிலச் செயலாளர் பிரவீன் உடன் இணைந்து பணியாற்றிட வேண்டுகிறேன்.*

**சிற்பி செல்வராசு**
பொதுச்செயலாளர்
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian